ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 439) Mar (2) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)...4

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 259)

ஸித்த முத்திரை

77-2. கர த்வயம் ஸமுத்தாநம் நாபிதேசே நியோஜயேத்
78-1. வாமஸ்ய தக்ஷிணம் ப்ருஷ்டே முத்ரைஷா ஸித்தஸம்ஸத:

குறிப்பு – இது ஸித்தர்களுக்கான முத்திரை ஆகும்.

வராபயத முத்திரை

78-2. ஸுஸ்ப்ருஷ்டம் தக்ஷிணம் ஹஸ்தம் ஆத்மநஸ்து பராங்முகம்
79. பராங்முக் லம்பமாநம் வாமபாணிம் ப்ரகல்பயேத்
வராபயதமுத்ரே த்வே லோகேசாநாமிமே ஸ்ம்ருதே
80. ஏகைகேந து மந்த்ரேண வஜ்ராத்யேவ க்ரமாத்யுதம்
அஸ்நாக்யாம் சக்தி ஸம்யுக்தாம் ப்ராகுக்தாம் ஸம்ப்ரதர்சயேத்

குறிப்பு – இது லோகபாலர்களுக்கான முத்திரை ஆகும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 404)

6-2-6. குழகி எங்கள் குழமணன்கொண்டு கோயின்மை செய்து கன்மம் ஒன்று இல்லை
பழகி யாம் இருப்போம் பரமே இத் திரு அருள்கள்
அழகியார் இவ் உலகம் மூன்றுக்கும் தேவிமை தகுவார் பலர் உளர்
கழகம் ஏறேல் நம்பீ உனக்கும் இளைதே கன்மமே

பொருள் – எங்களை வசீகரிக்கும்படியான செயல்களைச் செய்தபடி, எங்களுடைய மரப்பொம்மையை எடுத்துக்கொண்டு, உன்னுடைய மேன்மைகள் வெளிப்படும்படியாக எங்களிடம் பேசி எந்தப் பயனும் இல்லை. நாங்கள் உன்னுடைய இந்தப் பேச்சு மற்றும் செய்கைகளில் முன்பே பழகியவர்கள் ஆவோம். இத்தகைய வியக்க வைக்கும் உனது திருவருள்கள் எங்களால் பொறுத்துக் கொள்ளக்கூடியவை அல்ல. அதற்கு ஏற்றபடியான அழகு கொண்டவர்கள், உனது ஸர்வேச்வரத்தன்மைக்கு விஷயமாக உள்ள இந்த மூன்று லோகங்களில், உன்னுடன் இணைந்து உனக்கு ஏற்றவிதத்தில் முடிசூடுவதற்குப் பலர் உள்ளனர். பரிபூர்ணமான மேன்மை கொண்ட உனக்கு அவர்களுடைய கூட்டம் அல்லவோ ஏற்றது? எங்கள் கூட்டத்தில் வந்து நிற்கவேண்டாம். மற்றவர்களுக்குத் தீமை செய்வதிலேயே எப்போதும் நோக்காக உள்ல உனக்கும் இந்தச் செயலானது இளமைக்கு ஏற்றதே ஆகும்.

அவதாரிகை - தங்களகவாயிலோடுகிறது தெரியாமல் மறைத்துக் கொண்டு அநபிபவநீயைகளாயிருக்கிற இப்பிராட்டியையும் தோழிமாரையுங் கண்டு, அவன் தன் முக முத்ரைகளாலும், பாவகர்ப்பமான உக்திகளாலும், அத்தை

அநுவதித்தாப்போலே யிருக்கிற விலாஸ சேஷ்டிதங்களாலுமாக இவர்கள் அபிசந்தியைக் குலைத்து, இனி இவர்கள் நான் சொன்னவையெல்லாம் “வேண்டா” என்னமாட்டாதவர்களென்னும்படி வாய்மாளப் பண்ணி, அவ்வளவிலே சென்று இவளுடைய லீலோபகரணமான குழமணனை எடுத்துக் கொண்டான்.

விளக்கம் – தங்களுடைய மனதில் ஓடும் சிந்தனைகள் அனைத்தையும் வெளியில் தெரியாமல் மறைத்தவர்களாக, அணுக இயலாதபடி உள்ளவர்களாக இருக்கும் இந்தப் பராங்குசநாயகியையும், அவளுடைய தோழிமார்களையும் இவன் நோக்கினான். அவன் தன்னுடைய திருமுகத்தின் குறிப்புகள் மூலமும், ஆழ்பொருள்கள் அடங்கிய சொற்கள் மூலம், இவற்றை மறைமுகமாக உணர்த்தும் தனது லீலைகள் கலந்த செயல்கள் மூலமும் இவர்களுடைய எண்ணங்களைக் குலைக்க எண்ணினான்; அவற்றையும் செய்தான். அடுத்து இவர்கள், தான் செய்தவையும், உரைத்த பலவற்றையும் “வேண்டாம்” இயலாதபடிச் செய்யவேண்டும் என்று அவர்களைத் தனது விஷயத்தில் மேலும் ஈடுபடுத்த முனைந்தான். ஆகவே இவள் தனது விளையாட்டின் பொருட்டு வைத்துள்ள மரப்பாச்சி என்னும் மரப்பொம்மையை எடுத்துக்கொண்டான்.

வ்யாக்யானம் - (குழகியெங்கள் குழமணன் கொண்டு) என்கிறார்கள். குழகுகை யாவது யுவாக்களாயிருக்குமவர்கள், எதிர்த்தலை தங்களுக்கு அபவ்யமானால் அவர்களைச் சேரவிட்டுக் கொள்ளுகைக்காகப் பண்ணும் சேஷ்டிதங்களுக்குப்பேர். மேன்மையாலேயாகவுமாம், கீழ்மையாலேயாகவுமாம்; ஏதேனுமாக இவ்வளவு கிட்டி நின்று அவர்கள் நினைவைக் குலைத்துக் குழமணனை எடுத்துக் கொள்ளும்படியாகக் கைப்புகுந்தானிறே.

விளக்கம் – (குழகி எங்கள் குழமணன் கொண்டு) – “குழகி” என்பது அவதாரிகையில் கூறப்பட்ட “தனது திருமுகத்தின்” என்று தொடங்கும் பலவற்றையும் உணர்த்துமோ என்பதற்கு விடை அளிக்கிறார். “குழகுகை” என்றால், வாலிப வயதில் உள்ள ஆண் பிள்ளைகள், பெண்களாக உள்ளவர்கள் தங்கள் வசப்படவில்லை என்னும்போது, அவர்களைத் தங்களுடன் வந்து சேரும்படிச் செய்வதற்காகச் செய்கின்ற பல்வேறு செயல்கள் ஆகும். “கோயின்மை செய்து – கர்வம் அல்லது செருக்கு கொண்டு” என்பதன் மூலம், இவர்களுடைய மேன்மை வெளிப்பட்டபடி உள்ளது; இவ்விதம் உள்ளபோது, தனது முகத்தின் மாற்றங்கள் மூலம் மரப்பொம்மையை எவ்விதம்

கைக்கொள்கிறான் என்றால், தனது மேன்மை மற்றும் கீழே இறங்குதல் என்பவற்றால் ஆகும். எப்படியாவது இத்தனை அருகில் வந்து நின்று, அவர்கள் நினைவைக் கலங்கும்படிச் செய்து, மரப்பொம்மையை எடுத்துக் கொள்ளும்படியாக இங்கு புகுந்தான் அல்லவோ?

வ்யாக்யானம் - (எங்கள் குழமணன் கொண்டு) அதுதான் நீ யாரதென்று இருக்கிறாய்? அது நீ நினைக்கிறவர்களதல்லகாண்; அது எங்களது. உனக்கு இதினால் ஒரு கார்யமில்லை. “ ‘எங்களது’ என்றவாறே பொகட்டுப் போம்” என்று சொன்னார்கள்; அதுதானே அவனுக்குப் பற்றுகைக்கு உடலாயிற்று. “எங்களநுமதி வேண்டாவோவுனக்கு?” என்ன, “எனக்கு நிவாரகருண்டோ! நான் செய்வது செய்யலாமித்தனையன்றோ?” என்ன, (கோயின்மை செய்து கன்மமொன்றில்லை) நீ செய்கிற அடிக்கழிவால் உனக்கொரு பலமில்லை. கன்மமென்று கன்மபலத்தை நினைக்கிறது. ஆராய்ச்சியில்லாதவிடத்தே செய்யுமவற்றைச் செய்யாதே கொள்ளாய். அவை செய்தாலும் ஆமிறே உனக்கொரு ப்ரயோஜநமுண்டாகில். கோயின்மை செய்கையாகிறது இவர்கள் இசைவின்றிக்கே இருக்க இவர்கள் லீலோபகரணங்களை எடுத்துக் கொள்வது, அவர்கள் வேண்ட வேண்டக் கொடாதொழிவதாய் மிறுக்குப் பண்ணுகை.

விளக்கம் – (எங்கள் குழமணன் கொண்டு) – இந்தப் பொம்மையானது யாருடையது என்று நீ எண்ணுகிறாய்? அது யாருடையதாக இருக்கும் என்று நீ எண்ணுகிறாயோ அவர்களுடையது அல்ல என்று உணர்வாயாக. அது எங்களுடையது ஆகும். இதன் மூலம் உனக்கு இங்கு ஆக வேண்டிய செயல் ஏதும் இல்லை. “எங்களுடையது என்று கூறிவிட்டோம் அல்லவோ? இதனை இங்கேயே விட்டுச் செல்வாயாக”, என்றனர். இவ்விதம் கூறியது என்பதே அவன் அந்தப் பொம்மையை விரும்ப மேலும் காரணமாக அமைந்தது. அவர்கள் இவனிடம், “நீ உனது விருப்பத்தின்படி எடுக்கிறாய். எங்கள் அனுமதி வேண்டாமா?”, என்றனர். இதற்கு இவன், “என்னைத் தடுக்க யாரும் உள்ளனரோ? நான் செய்வதைச் செய்ய என்னால் இயலும் அல்லவோ?”, என்றான். இதற்குச் இவர்கள் விடை அளிக்கிறார்கள். (கோயின்மை செய்து கன்மம் ஒன்று இல்லை) - இவ்விதம் எங்களுக்கு உரிமையான பொருள்களை எடுத்தல் என்பது போன்ற முறைகேடான

செயல்களால் உனக்கும் பலன் இல்லை. "கன்மம்" என்பதன் மூலம் "கர்மபலன்" கூறினாள். அரசன் இல்லாத நாட்டில் செய்யப்படும் செயல்களை நீ இங்கு செய்யாமல் இருப்பாயாக. அவற்றைச் செய்தால் பொருந்தும்; எப்போது என்றால், அவற்றினால் பயன் உள்ளது என்றால் மட்டுமே ஆகும். "கோயின்மை செய்தல்" என்றால், இவர்களுடைய சம்மதம் இல்லாமல், இவர்களுடைய விளையாட்டுப் பொருள்களை எடுத்துக் கொள்ளுதல், அவர்கள் அதனைத் திரும்பித் தருமாறு மீண்டும் மீண்டும் வேண்டினாலும் தாராமல் இருத்தல் போன்றவை ஆகும்.

வ்யாக்யானம் - (கன்மமொன்றில்லை) நீ போகிறவிடத்துக்கு இவை கொண்டு போகவொண்ணாது; உனக்கு இவைதான் வேண்டா, இனி எங்களுக்கோ அநபிமதம்; ஆன பின்பு இச்செயலாலென்ன ப்ரயோஜநமுண்டு? இவை கொண்டு போனால், தங்களதல்லாமையாலே அவர்கள் முகம் பாரார்களே; நீ ஆதரித்த விஷயத்தினதல்லாமையாலே உனக்கு வேண்டா, எங்கள் இசைவோடே கொடு போகாமையாலே எங்களுக்கு ப்ரியமன்றே! ஆன பின்பு, இத்தால் வருவதொரு பேறில்லை காணென்றார்கள். "அது கிடக்க; நான் முன்னம் உங்களோடு ஏககண்டன்; எனக்கும் ஒரு ப்ரயோஜநமில்லை, இத்தை ஸாதநமாகக் கொண்டு சாதிக்கவேண்டுவதோர் அர்த்தங் கண்டு வைத்திலேன்; இதுதானேயிறே எனக்கு ப்ரயோஜநம்; ப்ரயோஜநத்துக்கு ஒரு ப்ரயோஜநமுண்டோ?" என்றான்; அங்ஙனேயானவன்று அநவஸ்தை வரத் தொடங்குமிறே.

விளக்கம் – (கன்மம் ஒன்றில்லை) - நீ செல்லும் இடமாக உள்ள அவர்களிடம் இவற்றைக் கொண்டு செல்வதற்கு இயலாது. உனக்கு இவை அவசியம் இல்லை. இது எங்களுக்கும் விருப்பம் இல்லாத செயலாக உள்ளது. இவ்விதம் உள்ளபோது உனது இந்தச் செயலால் என்ன பயன் உள்ளது? இவற்றை நீ எடுத்துக் கொண்டு அவர்களிடம் சென்றால், இவை தங்களுடையது அல்ல என்பதால், அவர்கள் இவற்றைக் காணவும் மாட்டனர் அல்லவோ? நீ விரும்பும் அவர்களுடையது அல்ல என்பதால், இவை உனக்கும் வேண்டாதவையே ஆகும். எங்களுடைய அனுமதியுடன் நாங்கள் அளிக்காத காரணத்தால், எங்களுக்கும் விருப்பம் இல்லை. இவ்விதம் உள்ளதால், இந்தச் செயல் மூலமாக எந்தப் பயனும் இல்லை என்கிறார்கள். இதனைக் கேட்ட இவன், "எனக்கு உங்களிடம் அன்பு இல்லை

என்று நீங்கள் கூறுவது ஒருபுறம் இருக்கட்டும். நான் முன்பே உங்களுடன் ஒத்த கருத்து கொண்டவன் ஆவேன். இந்த மரப்பொம்மையால் எனக்கு ஒரு பயனும் இல்லை; ஆனால் இதனை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, இதன் மூலம் நிறைவேற்றிக் கொள்ளவேண்டிய விஷயத்தை முடித்துக் கொள்வதற்கான வேறு ஒன்றையும் நான் காணவில்லை. இதுவே எனக்குப் பயனாக உள்ளது. பயனுக்கு ஒரு பயன் இருக்குமோ?", என்றான். இப்படியாக "பயனுக்கு ஒரு பயன், அந்தப் பயனுக்கு ஒரு பயன்" என்று நீண்டு கொண்டே செல்லும் அநவஸ்தை தோஷம் ஏற்படும் அல்லவோ?

வ்யாக்யானம் - (பழகியாமிருப்போம்) இப்பொய்களுக்குப் பழையோமல்லோமோ! எங்களுக்கன்றுகாண் இவை சொல்லுவது! நீ சொல்லும் பொய்யெல்லாம் "மெய்" என்றிருப்பார்க்குச் சொல்லாயென்றார்கள். அவனும், "இத்தலையையொழிய எனக்குச் செல்லாது" என்னுமிடந் தோற்றச் சில க்ரியைகளைப் பண்ண, (எம்பரமேயித் திருவருள்கள்) நீ எங்களளவல்லாத அபிநிவேசத்தைப் பண்ணி, குளப்படியிலே கடலை மடுத்தாற்போலே நீ செய்கிறவையெல்லாம் எங்களால் பொறுக்கப்போமோ? நீ செய்கிறவையெல்லாம் பொறுக்கவல்லார் வேறே சிலவர்களென்றார்கள். "அவர்களார்?" என்றான். (அழகியாரிவ்வுலகு மூன்றுக்கும்) "த்ரைலோக்ய ராஜ்யம் ஸகலம் ஸீதாயாநாப்நுயாத் கலாம்" மூன்று லோகத்தையும், அத்தோடே விச்வ சப்த வாச்யனானவன் தன்னையுங்கூட ஒரு தட்டாக்கினால், பிராட்டியுடைய ஒரு கலாமாத்ரத்துக்கு எடை நிற்க மாட்டாது. "அவர்களெங்ஙனேயிருப்பர்கள்?" என்றான். (தேவிமை தகுவார்) "உனக்குப் பட்டம் கட்டப் போரும்படியாயிருப்பார்" என்ன; "ஆனால், எனக்கு உபேக்ஷிக்கைக்கும் சிலர் வேணுமே!" என்றான். (பலருளர்) உனக்குப் பொகடுகைக்கும் விஷயமங்கே உண்டென்கிறார்கள். ஒருத்தனுக்கொன்று ஸ்வபாவமானால், அது வேறோரிடத்தே போங்காட்டில் குலையாதிறே; அப்படியே, அங்குள்ளாரையும் பொகடுகை இவனுக்கு ஸ்வபாவமென்னுமிடந்தோற்றச் சொல்லுகிறாள். "ஓரடிப் பாடரல்லீரே நீர்; பரப்பரல்லீரோ! அவர்கள் பக்கலேறப்போம்" என்ன; "ஆனால், அங்குப் போம்வழியும், போனாற் செய்யும்படிகளும் எல்லாம் கேட்டுப்போக வேணுமே; இனித்தான் அந்தேவாஸிகளுக்கிறே ஒன்று சொல்லுவதும்; 'பரிப்ரஸ்நேந

ஸேவயா' என்றிறே கேட்பார்படி; ஆன பின்பு, நாலடி கிட்ட நின்று கேட்க வேணும்" என்று திரளிலே வந்து புகுரப் புக்கான்.

விளக்கம் - (பழகி யாம் இருப்போம்) - இப்படிப்பட்ட பொய்களுக்கு நாங்கள் பழக்கப்பட்டவர்கள் அல்லவோ? இவற்றை நீ இங்கு வந்து உரைக்கவேண்டாம். நீ கூறும் பொய்கள் அனைத்தையும் மெய் என்று நம்பியபடி உள்ளவர்களிடம் அல்லவோ நீ கூறவேண்டும்? இவ்விதம் செய்வாயாக", என்றனர். இதனைக் கேட்ட அவன் தனது மனதில், "இவர்களை விடுத்து வேறு எங்கும் நமக்குச் செல்ல இயலாது", என்று எண்ணியவனாக, அந்தச் சிந்தனை வெளிப்படும்படியாக ஒரு சில செயல்களைச் செய்தான். இதனைக் கண்ட இவர்கள் கூறுகிறார்கள். (எம்பரமேயித் திருவருள்கள்) - பாசுரத்தில் இல்லாத "எம்" என்பதைச் சேர்த்துக் கொண்டு கூறுகிறார். நீ அளவில்லாத ஆசையை எங்கள் மீது வைத்து, அதன் விளைவாக, மாட்டின் குளம்பால் ஏற்பட்ட குழியில் கடலை நிரப்ப எண்ணுவது போன்று, நீ செய்பவற்றை எங்களால் பொறுக்க இயலுமோ? நீ செய்யும் செயல்களைப் பொறுத்துக் கொள்ளக் கூடியவர்கள் வேறு சிலர் ஆவர். இதனைக் கேட்ட இவன் "யார் அவர்கள்?", என்றான். இதற்கு விடை அளிக்கிறாள். (அழகியார் இவ்வுலகு மூன்றுக்கும்) – "மூன்று லோகங்களையும் விலையாகக் கொடுக்கலாம்படி உள்ள அழகியார்" என்று பொருள்; இதற்கான ப்ரமாணம் ஸுந்தரகாண்டம் (18-14) - த்ரைலோக்ய ராஜ்யம் ஸகலம் ஸீதாயாநாப்நுயாத் கலாம் - மூன்று லோகங்களையும், அத்துடன் "விச்வம்" என்ற சப்தத்தாலும் கூறப்படும் ஸர்வேச்வரனையும் சேர்த்து தராசின் ஒரு தட்டில் வைத்தால் கூட, ஸீதையின் ஒரு பகுதிக்குக் கூட இந்த எடை காணாது - என்பது காண்க. இதனைக் கேட்ட இவன், "அப்படிப்பட்டவர்கள் இருப்பார்களோ?", என்றான். இதற்கு இவர்கள், "(தேவிமை தகுவார்) - அவர்கள் உனக்குப் பட்டம் கட்டுவதற்கு ஏற்றபடியே இருப்பார்கள்", என்றனர். இதற்கு இவன், "அவர்கள் நமக்கு ஏற்புடையபடி உள்ளனர் என்றால், நம்மால் தள்ளத்தக்க சிலர் வேண்டும் அல்லவோ?", என்றான். இதற்கு இவர்கள் விடை அளிக்கிறார்கள். (பலர் உளர்) – நீ "வேண்டாம்" என்று ஒதுக்குவதற்கும் அவர்களில் பலர் உள்ளனர். இவன் தள்ளுவதற்கு இவர்களே விஷயம் என்று இவர்கள் எண்ணும்போது, அங்குள்ளவர்களை இவன் தள்ளுவானோ என்பதற்கு விடை அளிக்கிறார். ஒருவனுக்கு இயல்பாகவே உள்ள தன்மைகள், வேறு இடத்திற்குச் சென்றாலும்

மாறாது அல்லவோ? அது போன்று, அங்கு உள்ளவர்களையும் தள்ளுதல் என்பது இவனுக்கு இயல்பே ஆகும் என்பது வெளிப்படும்படியாகக் கூறுகிறார்கள்; இவனிடம், "நீர்தான் ஒரு இடத்தில், ஒற்றையடிப் பாதை போன்று செல்லக் கூடியவரோ? அல்லவே! பல இடங்களிலும் இருக்கக் கூடியவர் அல்லவோ? அவர்களிடமே செல்வீராக", என்றாள். இதற்கு இவன், "ஆயினும், அங்கு செல்லும் வழியைக் குறித்தும், அங்கு சென்றால் செய்யவேண்டிய செயல்கள் குறித்தும் நான் ந்ன்கு கேட்டு அறிந்து அல்லவோ செல்லவேண்டும்? ஆகவே உங்கள் அருகில் வந்தேன்", என்பதற்கு இவள், "அதனைத் தூரமாக நின்று கேட்கலாம் அல்லவோ?", என்றாள். உடனே இவன், "சிஷ்யர்களுக்கும், ஆச்ரமவாசிகளுக்கும் அருகில் இருந்து மட்டுமே கூறுவார்கள்", என்றான். உடனே இவள், "சீடர்கள் அருகில் வரவேண்டுமோ?", என்பதற்கு இவன், "கீதை (4-34) – பரிப்ரஸ்நேந ஸேவயா - சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து வணங்கி - என்பதற்கு ஏற்ப அல்லவோ சீடர்கள் இருக்கும் விதம் உள்ளது? ஆகவே நீங்கள் கூறுவதை நான்கு அடி முன்பாக நான் வந்து நின்று கேட்கவேண்டும்", என்று உரைத்து இவர்கள் கூட்டத்தில் புக முயற்சித்தான்.

வ்யாக்யானம் - (கழகமேறேல்நம்பீ) அவர்கள் முன்னமானாராகிடுக. ஏறிட்டுக் கொள்ளுவது எங்களுக்கு பரமோ? நீர் முன்னம் எங்களோலக்கத்தில் புகுராதே கொள்ளும். இவ்விடத்தே பட்டரருளிச் செய்வதொரு வார்த்தையுண்டு; "ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய், உபயவிபூதி யுக்தனாய், ஸர்வாதிகனாய் ஸர்வநியந்தாவாயிருக்கிற ஸர்வேச்வரன், பெண்களிருந்தவிடத்தே புக்கல்லது நிற்கமாட்டாத செல்லாமை விளைய அவர்கள் 'நீயிங்குப் புகுராதே கொள்' என்ன; விலங்கிட்டாற்போலே பேரவும் திரியவும் மாட்டாதே தடுமாறி நின்றானென்கிற ஸௌல்யம் தங்களையுமிவர்களையுமொழிய ஆரறிந்து கொண்டாட வ்யாஸாதிகள்ளெழுதியிட்டு வைத்துப் போனார்களோ?" என்றருளிச் செய்வர்.

விளக்கம் - (கழகம் ஏறேல் நம்பீ) - நீ அவர்கள் முன்பாகச் செல்பவனாக இருப்பாயாக. நீ அங்கு செல்லும் வழிகள் மற்றும் அங்கு சென்றவுடன் செய்யும் செயல்கள் ஆகியவற்றை எங்களுக்கு கவனிக்கத்தக்கதாக நாங்கள் கொள்ளவேண்டுமோ? நீ முதலில் எங்கள் கூட்டத்தில் புகாமல் இருப்பாயாக. இவர்கள், "எங்கள் கூட்டத்தில் புகாமல் இருப்பாயாக" என்று கூறியவுடன்

செய்வது அறியாமல் நின்றான்; இந்த விதத்தை எண்ணியபடி ஸ்வாமி பராசரபட்டர் கூறும் கருத்தை அருளிச்செய்கிறார்; "அனைத்து திருக்கல்யாண குணங்களும் நிறைந்தவனும், இரண்டு விபூதிகளையும் கொண்டவனும், அனைத்தையும் இயக்குபவனும் ஆகிய ஸர்வேச்வரன் க்ருஷ்ணனாக வந்து நான்கு ஆயர் குலப்பெண்கள் இருந்த இடத்தை கண்டவுடன், அங்கு அவர்கள் நடுவில் புகுந்து நிற்பது என்பதைச் செய்ய இயலாமலும், அங்கிருந்து செல்ல முடியாமலும் நின்றான். அப்போது அவர்கள் 'நீ இங்கு வரவேண்டாம்' என்றார்கள். இதனைக் கேட்டவுடன், விலங்குகள் இடப்பட்டவன் போன்று அங்கு நிற்கவும் இயலாமல், நகரவும் இயலாமல் தடுமாறி நின்றான். இந்த சௌசீல்ய குணத்தைத் தங்களைத் தவிர உள்ள மற்றவர்களும் அறியும்படியாகச் செய்து, அவர்கள் கொண்டாடும்படியாக வ்யாஸர் போன்றவர்களும், ஆழ்வார்களும் எழுதி வைத்துப் போனார்களோ?", என்பார்.

வ்யாக்யானம் – "ஸர்வநியந்தாவானவன் சிலர்க்கு நியமிக்கலாம்படி எளியனானான்" என்றால், "இது மெய்" என்று கைக்கொள்ளுவாரைக் கிடையாதிறே. சாஸ்த்ரங்களெல்லாம் ஈசேசிதவ்ய விபாகம் பண்ணி ஒருங்கவிடாநிற்க, அத்தலை இத்தலையாகச் சொல்லுகிறதிறே இது! "சாது கோட்டியுட் கொள்ளப்படுவார்" என்று சொல்லுவது, வைஷ்ணவர்களுடைய திரளிலே ஒருவன் வந்து புகுந்தால் துர்மாநத்தாலே மலையிட்டமுக்கினாற்போலே இருக்கையன்றிக்கே, நீரும் நீரும் கலந்தாற்போலே, இவன் புகுந்தமை தெரியாதபடியிருந்து, அவர்கள் இடங்கொடுத்து அவர்கள் பரிக்ரஹிக்கையிறே ஒருவனுக்கு நன்மையாவது; இது இவர்களுக்கேயன்றியே, அவனுக்குமொத்திருக்கிறபடி; "ஸ சாபி ராம: பரிஷத்கதச்சநைர்ப்பூஷயாஸக்தமநாபபூவஹ" பெருமதிப்பராய்ப் பாட்டறிந்து கொண்டாடுகைக்குப் போரும்படி பேரறிவாளரான வித்வஜ்ஜநங்களும் தாமுமாகப் பேரோலக்கமிருந்து பிள்ளைகளைப் பாடவிட்டுத் தாம் ஸிம்ஹாஸநஸ்தரா யிருந்தார்; இவர்கள் தாழவிருக்கத் தாமுயரவிருந்த இடம் தமக்கு அநபிமதமாகையாலே ஸிம்ஹாஸநத்தினின்றும் மெள்ள இழிந்து, தெரியாதபடி இவர்கள் நடுவே புகுந்திருந்தார். அது என்னென்னில், ராஜா எழுந்திருந்தால் ஓலக்கம் கிளம்புமிறே; தாம் எழுந்திருந்தவாறே ஓலக்கம் கிளம்புகிறதாகக் கருதி, மெள்ளப் புகுந்திருந்தாரென்கிறது. இங்ஙன் வேண்டுவானென்? என்னில்;

"அநுபுபூஷயா" என்னுதல், "பாவிதுமிச்சயா" என்னுதல்; "இவர்களோடே கூடியிருந்து அநுபவிக்கைக்காக" என்னுதல்; "தாமுளராகைக்காக" என்னுதல்.

விளக்கம் – "அனைவரையும் நியமிக்கும் ஸர்வேச்வரன், ஒரு சிலர் தன்னை நியமிக்கும்படி எளியவனாக நின்றான்" என்று கூறினால், இதனை உண்மை என்று ஏற்பவர்களை எளிதில் காண இயலாது அல்லவோ? இதனைச் சாஸ்த்ரங்கள் கூறினால், உண்மை என்று ஏற்றுக்கொள்ளலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; சாஸ்த்ரங்கள் அனைத்தும் "நியமிப்பவன் மற்றும் நியமிக்கப்படுபவை" என்று வேறுபாடு செய்து, தனித்தனியாகத் தெளிவாக உரைக்கின்றன; இவ்விதம் உள்ளபோது இவர்கள் எழுதி வைத்துச் சென்ற ப்ரபந்தங்கள் போன்றவை, "நியமிப்பவன் - நியமிக்கப்படுபவை" என்றுள்ள தன்மைகளை மாற்றி, இவனை "நியமிக்கப்படுபவன்" என்றும், அவர்களை "நியமிப்பவர்கள்" என்றும் கூறுவது காணலாம். "சாது கோஷ்டி" என்று தொடங்கும் வரி மூலம், ஸ்ரீவைஷ்ணவர்களுடைய கோஷ்டியில் சேர்தல் என்பது அவனுடைய அடியார்களுக்கு மட்டும் அல்லாமல், ஸர்வேச்வரனுக்கும் எண்ணமாகவே உள்ளது என்றார். அதாவது, ஸ்ரீவைஷ்ணவர்களுடைய கோஷ்டியில் ஒருவன் வந்து புகுந்தால், செருக்கு காரணமாக மலையுடன் சேர்த்து அமுக்கியது போன்று அல்லாமல், நீருடன் நீர் கலந்தது போன்று, இவன் உள்ளே புகுந்தது தெரியாதது போன்று ஒரே கோஷ்டியாக சேர்த்துக் கொண்டு, அவர்களின் கோஷ்டியில் இடம் அளித்து, அவர்கள் இவனை ஏற்றுக் கொள்வது அல்லவோ ஒருவனுக்கு நன்மையாக உள்ளது? இது இவர்களுக்கு மட்டும் அல்லாமல், ஸர்வேச்வரனுக்கும் பொதுவாகவே உள்ளது. இவ்விதம் இருக்குமோ என்பதற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார்; பாலகாண்டம் - (4-31) – ஸ சாபி ராம: பரிஷத்கதச்சநைர்ப்பூஷயாஸக்தமநாபபூவஹ – இராமன், தானும் மற்றவர்களுடன் சேர்ந்து நின்று அனுபவிக்கவேண்டும் என்ற விருப்பம் காரணமாக, மெதுவாகவே சபையை அடைந்தான் – என்பது காண்க; லவனும் குசனும் பாடுவதன் மதிப்பை அறிந்து, அப்பாட்டுகளைக் கொண்டாடி, அவர்களையும் கௌரவிக்கும்விதமாக, அறிவுள்ள பண்டிதர்களும் தானுமாகச் சபையில் வீற்றிருந்து, தனது புத்திரர்களைப் பாடும்படிச் செய்து, தான் ஸிம்ஹாசநத்தில் வீற்றிருந்தான். ஆனால் அவர்கள் நின்று பாடிய இடம் தாழ்வாகவும், தான் வீற்றிருந்த இடம் உயரமாகவும்

இருந்ததால், தான் அமர்ந்திருந்த இடத்தின் மீது விருப்பம் இன்றி மெதுவாக இறங்கி வந்து, இவர்கள் அறியாதபடி இவர்களுக்குள் புகுந்தான். ஏன் இவ்விதம் மெல்ல வந்து புகவேண்டும்? அரசன் எழுந்தால், சபை முழுவதும் எழுந்திருக்கும் அல்லவோ? தான் எழுந்தவுடன் அந்தச் சபை முழுவதும் எழும் என்று எண்ணி, இவ்விதம் மெல்ல எழுந்தான். இவ்விதம் ஏன் இவர்கள் கூட்டத்தில் வந்து இராமன் புகவேண்டும்? தனது ஸிம்ஹாஸனத்திலேயே இருக்கலாம் அல்லவோ? இதற்கு விடை அளிக்கிறார். "அநுபுபூஷயா - அனுபவிக்கவேண்டும்" என்றும், "பாவிதும் இச்சயா - தான் அங்கு இருக்கவேண்டும்" என்றும் எண்ணுவதால் ஆகும்.

வ்யாக்யானம் - (நம்பீ) உமக்கும் எங்களுக்கும் உள்ள நெடுவாசி பாரீர்! உமக்கொன்று கேட்கவேண்டும்படியாயிருந்ததோ? முதலிகளாயிருக்கிற உமக்கு நாங்களிருக்கிற இடத்தே புகுருகை போருமோ? என்றார்கள். "அழகிது! நான் முதலியாகிலும் ஆகிறேன்; பயலியாகிலும் ஆகிறேன்; என்னைத்தான் அறிகையில்லையோ! 'தீமை செய்யும் சிரீதரன்' என்றன்றோ என்னைச் சொல்லுவது? ஆனபின்பு, நாலு பெண்களிருந்தவிடமெங்கும் தீம்பு செய்கை எனக்கு ஸ்வரூபமன்றோ?" என்றான். (உனக்குமிளைதே கன்மமே) தீம்பு செய்கையிலே சமைந்திருக்கிற உனக்குங்கூட இது பாலிசம். தீமை செய்வார்க்கும் ஒரு ப்ராப்தி வேண்டாவோ?

விளக்கம் – (நம்பீ) – உமக்கும் எங்களுக்கும் உள்ள பெரிய வேறுபாட்டைக் காண்பாயாக. இப்படி உள்ளபோது, எங்களிடம் ஏதேனும் கேட்கும்படியான நிலை உனக்கு உள்ளதோ? அல்லது பெரியவனாக உள்ள உனக்கு, நாங்கள் உள்ள இடத்திற்கு வருதல் ஏற்குமோ? இதனைக் கேட்ட இவன், "நல்ல அழகு! நான் பெரிய இடத்தைச் சேர்ந்தவனாக இருந்து விட்டுப்போகிறேன் அல்லது பாலர்களுக்கு ஏற்ற செயல்களைச் செய்பவனாக இருந்து விட்டுப்போகிறேன். நீங்கள் என்னை அறியவில்லையா? நாச்சியார் திருமொழி (2-1) தீமை செய்யும் சிரீதரன் - என்று அல்லவோ என்னைக் கூறுவர்? இப்படி உள்ளபோது, நான் பெண்கள் உள்ள இடத்திற்குச் சென்று தீங்கு ஏற்படுத்துதல் அல்லவோ எனக்கு ஸ்வரூபமாக உள்ளது?", என்றான். (உனக்குமிளைதே கன்மமே) - தீமை செய்வதிலேயே ஈடுபட்டபடி உள்ள உனக்கு இது பாலர்களின் செயலாக

இருக்கலாம். ஆனால் யாரிடம் சென்று நீ இது போன்ற தீங்குகள் செய்கிறாயோ, அவர்களுடன் ஏதேனும் ஒரு ஸம்பந்தம் இருக்கவேண்டாமா?

6-2-7. கன்மம் அன்று எங்கள் கையில் பாவை பறிப்பது கடல் ஞாலம் உண்டிட்ட
நின்மலா நெடியாய் உனக்கேலும் பிழை பிழையே
வன்மமே சொல்லி எம்மை நீ விளையாடுதி அது கேட்கில் என்னைமார்
தன்ம பாவம் என்னார் ஒரு நான்று தடி பிணக்கே

பொருள் - எங்களுடைய கைகளில் உள்ள மரப்பொம்மையை நீ பறிப்பது உனக்குத் தகுந்த செயல் அல்ல. ப்ரளய நீரில் அழுந்தியபடி இருந்த இந்த ஜகத்தை உட்கொண்டு, வயிற்றில் வைத்துக் காப்பாற்றி, அதனையே உனக்கு பெரும் பயன் என்று நீ கருதியதால், அந்த மகிழ்ச்சி காரணமாக மிகுந்த ஒளியை வீசுபவனே! "நாம் இதுவரை செய்த உதவிகள் போதாது" என்று எண்ணி, ஜகத்தை வயிற்றிலிருந்து வெளியேற்றி, காப்பாற்றியபடி உள்ள பெருமை கொண்டவனே! இப்படிப்பட்ட உனக்கும், "அபலைகளாக உள்ளவர்களைத் தீண்டி, அவர்கள் கைப்பாவைகளைப் பறித்தான்" என்னும் பழியானது தாழ்ச்சியை ஏற்படுத்தும். மேலும் எங்களை நோக்கி மர்மமான சொற்களைக் கூறியபடி விளையாடுகிறாய். இதனைக் கேட்கும் எங்கள் தமையன்மார்கள், இது தர்மம் என்று எண்ணமாட்டனர். ஒருநாள் தடியை எடுத்தபடி வருவர்.

அவதாரிகை - ஸர்வோபாயங்களையும் அநுஷ்டித்து ஸ்ரீபரதாழ்வான் தன்பக்கல் பட்டதெல்லாம் தான் இவர்கள் பக்கலிலே பட்டான், "விநிவர்த்தயிதும் பலாத்" என்று மீட்கையிலே போர வருந்தினானிறே, "சேஷ்யே புரஸ்தாச்சலாயா யாவந்மே ந ப்ரஸீததி" தாமே இரங்கி மீளும்படி பண்ணுகிறேன்; அதுதான் கேட்டார் வாய்க் கேட்கவேணுமோ? "புரஸ்தாத்" என்றானிறே. அப்படியே இவனும் ஸர்வோபாயங்களையும் ப்ரவர்த்திப்பித்த விடத்திலும் அணுகவொண்ணாதபடி கடுமை தோற்ற இருந்தார்கள்; "இனிச் செய்யலாவதென்?" என்று பார்த்தான்; "பலத்தாலே கார்யங் கொள்வோம்" என்று நிச்சயித்து, இவர்கள் பாவையை எடுப்பானாகக் கணிசித்தான்; "ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்து கோஸலா:" என்று நினைவறியுமவர்களாகையாலே, எல்லாருங்கூட வைத்த பாவையைச் சென்றெடுத்துக் கொண்டார்கள்; அதுதான் "நங்கார்யம்" என்றே இருந்தான், "ப்ருதக் ப்ரயத்நாபேக்ஷிதமின்றிக்கே ஒழியப் பெற்றோம்" என்று பார்த்தான்.

திருக்குரவை போலே ஆளுக்காளாய் நின்று கைப்பிடிக்க வேண்டாவாயிருந்தது; “நல்ல வாய்ப்பு” என்று இவர்கள் பாவையைச் சென்று பற்றினான்.

விளக்கம் – இராமனாகத் தான் வந்தபோது, தன்னை மீண்டும் அயோத்திக்குத் திரும்ப வைப்பதற்காக, தாய்மார்கள் மூலமும், வசிஷ்டர் போன்றவர்கள் மூலமும் பரதன் படாதபாடுகள் பட்டான். இவை அனைத்தையும் இன்று தான் இவர்களிடம் படுகிறான். இதற்கான ப்ரமாணம், அயோத்யாகாண்டம் (82-19) – விநிவர்த்தயிதும் பலாத் - இராமன் அயோத்தி திரும்ப அனைத்து உபாயங்களையும் கைக்கொள்வேன் - என்று இராமனை மீட்க பரதன் மிகவும் வருந்தியது காண்க. இந்த விஷயத்தில் மேலும் ஒரு ப்ரமாணம் காண்பிக்கிறார். அயோத்யாகாண்டம் (111-14) - சேஷ்யே புரஸ்தாச்சலாயா யாவந்மே ந ப்ரஸீததி - இராமனைத் தானே இரக்கம் கொள்ளச் செய்து அயோத்திக்குத் திரும்பும்படிச் செய்கிறேன் - என்றான். பரதன் இவ்விதம் கூறியதை யார் கேட்டார்களோ அவர்கள் வந்து கூறலாம்படியாகவோ நிலை இருந்தது? அல்லவே! “புரஸ்தாத் - பர்ணசாலையில் அவர் முன்பாகக் கிடப்பேன்” என்றான் அல்லவோ? பரதனைப் போன்றே இவனும் அனைத்துவிதமான உபாயங்களையும் செய்தபடி உள்ளபோதிலும், அவர்கள் அணுக இயலாதபடி கடுமை வெளியில் புலப்படும்படி நின்றார்கள். “இனி என்ன செய்ய வேண்டும்?”, என்று எண்ணினான். பின்னர், “நம்முடைய பலத்தை ப்ரயோகித்து நம்முடைய கார்யத்தைச் செய்து முடிப்போம்” என்று நிச்சயித்து, இவர்களுடைய பாவையை எடுப்பதற்குத் தொடங்கினான். ஆனால் இவன் இவ்விதம் செய்யத் தொடங்கியதை அவர்கள் எப்படி அறிந்தனர்? “ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்து கோஸலா: - கோசல நாட்டில் உள்ளவர்கள், பார்வை மூலமே எண்ணத்தை அறியவல்லவர்கள்” என்பதற்கு ஏற்ப, நினைவை அறிபவர்கள் என்பதால், அனைவரும் ஒன்றாகக் கூடிச் சென்று, தாங்கள் வைத்த பாவையை எடுத்துக் கொண்டனர். இதனைக் கண்ட இவன், “நமது கார்யம் நிறைவேறியது” என்று நின்றான். இவர்கள் சேர்ந்து வந்து தங்களுடைய பாவையை எடுத்துக் கொண்டதன் மூலம் இவனுடைய கார்யம் நிறைவேறியது எப்படி என்றால், “இவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே சென்று தனது கார்யத்தை நிறைவேற்றிக் கொள்ள முயல்வதற்கான அவசியம் இல்லாமல் போயிற்று”, என்பதால் ஆகும். அதாவது குரவைக்கூத்தில் ஒவ்வொரு கோபிகைக்கும் தனித்தனியான க்ருஷ்ணனாக நின்று அவரவர்கள் கையைப் பிடித்தது போன்று செய்யவேண்டிய அவசியம் இல்லாமல் போயிற்று. “நல்ல

வாய்ப்பு கிட்டியது" என்று எண்ணியவனாக இவர்களுடைய பாவையைச் சென்று கைப்பற்றினான்.

வ்யாக்யானம் - (கன்மமன்று) வாராய்! உனக்கிது கார்யமன்று கிடாய் என்கிறார்கள். "ஏன்தான் இது கார்யமன்றிக்கே ஒழிவானென்?" என்றான். (எங்கள் கையிற் பாவை பறிப்பது) "இதுதான் ஆரதென்றிருக்கிறாய்? நீ நினைக்கிறவர்களதன்றுகாண்! இதெங்களதுகாண்!!" என்றார்கள். "அதுதான் மெய்யே!" என்றான். "யஸ்யைதே தஸ்ய தத் தநம்" இறே. இவர்கள் ஸ்வரூபஜ்ஞராகையாலே இவனுடையவர்களிறே. இவர்கள் "எங்களது" என்கையிறே அவன் விருப்பத்துக்கடி. "இவர்களது" என்னுமிடம் அறுதியிட்டுக் கொள்ளுகையிலேயிறே அவனுக்குத் தாத்பர்யம்; நீ நினைக்கிறவர்களதன்று என்கையிறே இவர்களுக்குத் தாத்பர்யம்.

விளக்கம் – (கன்மம் அன்று) - இவ்விதம் இவன் பாவையை எடுப்பதைக் கண்ட அவர்கள், "வாராய்! இது உனக்கான கர்மம் அல்ல", என்றார்கள். இதனைக் கேட்ட இவன், "ஏன்? இது எனது கார்யம் அல்ல என்று நீங்கள் விலக்குவது ஏன்?", என்றான். இதற்கு இவர்கள், "இந்தப் பாவையானது யாருடையது என்று நீ எண்ணுகிறாய்? இது நீ எண்ணுபவர்களுடையது அல்ல. இது எங்களுடையது ஆகும்", என்றனர். இதற்கு இவன், "நீங்கள் கூறுவது உண்மையே ஆகும்", என்றான். ஆனால், இவர்கள் கூறுவது போன்று உண்மையாக இருந்தால், இவனுக்கு என்ன பயன் உள்ளது என்பதற்கு விடை அளிக்கிறார்; உத்யோகபர்வம் - யஸ்யைதே தஸ்ய தத் தநம் – மனைவி போன்றவர்கள் யாருக்கு உடைமையோ, அவர்கள் செல்வமும் அவர்களுக்கே உடமை – என்று அல்லவோ கூறப்பட்டது? இவர்கள் தங்களுடைய ஸ்வரூபம் குறித்து அறிந்தவர்கள் என்பதால் இவனுக்கு உடைமையானவர்கள் ஆகிறார்கள்; ஆகவே இவர்கள் அந்தப் பாவையை "எங்களுடையது" என்று கூறுதலே இவனுடைய விருப்பத்திற்குக் காரணமாக உள்ளது; காரணம் அவ்விதம் இருந்தால் மட்டுமே இவன் அவற்றைப் பறிப்பதற்கு ஏற்றதாக இருக்கும் அல்லவோ? ஆகவே இவர்கள், "இந்தப் பாவை எங்களுடையது" என்று உறுதிபடக் கூறுவதில் மட்டுமே நோக்கு உடையவனாக

இவன் உள்ளான்; "நீ நினைக்கும் அவர்களுடைய பாவை அல்ல எங்கள் கையில் உள்ளது", என்று கூறுவதில் இவர்களுடைய உறுதி உள்ளது.

வ்யாக்யானம் - (எங்கள் கையில் பாவை பறிப்பது) இவர்கள் கையிலே பாதி கொடுத்துப்போலே காணும் பறிப்பது! அவர்கள் விட்டுக் கடக்க நிற்கும் அதிலொரு ப்ரயோஜநமில்லையே; அத்தையவர்கள் ஒருதலைப் பற்றத் தானுமொருதலை பற்றுமன்றிறே, ஒரு கலத்திலே உண்பாரைப் போலே போகமாயிருப்பது. (கையில் பாவை பறிப்பது) கிடக்கிறதெல்லாங் கிடக்க, எங்கள் கையிற் பாவை பறிப்பது கன்மமன்று. செய்யக் கடவதல்லாதத்தைச் செய்யாநின்றாய்; உனக்கு இத்தாலொரு ப்ரயோஜநமில்லைகாண் என்றார்கள். ஆக, இத்தால் பலித்ததென்? என்னில், ஒரு வைஷ்ணவன் "என்னது" என்று அபிமாநித்துக் கைப்பிடித்தால் "அவன் விரும்புவது" என்றபடி. "செய்யக்கடவதல்லாதத்தைச் செய்யாநின்றாய்' என்று நீங்கள் சொல்லுவானென்? செய்யக் கடவதுக்கும் செய்யக் கடவதல்லாததுக்கும் வரம்பு கட்டினேன் நானன்றோ!" என்றான்.

விளக்கம் – (எங்கள் கையில் பாவை பறிப்பது) - அந்தப் பாவையைப் பறித்துக் கொள்ளும்போது, பாவையின் பாதிப்பகுதி அவர்கள் கையில் உள்ளது போன்றும், மீதிப்பாதி இவன் கையில் உள்ளது போன்றும் வைத்தபடி இழுக்கிறான். ஆனால் இவன் சக்தி கொண்டவன் அல்லவோ? முழுவதுமாக அந்தப் பாவையை இழுத்துப் பறித்துக் கொள்ளலாம் அல்லவோ? அவர்கள் கையில் ஒரு பகுதி உள்ளது போன்று ஏன் வைக்க வேண்டும்? அவர்கள் அந்தப் பாவையை முழுவதுமாக விட்டுக் கொடுத்து, இவன் அங்கிருந்து அகல்வதில் எந்தப் பயனும் இல்லை அல்லவோ? அந்தப் பாவையை அவர்கள் ஒருபுறம் பிடித்து இழுக்க, இவன் மற்றொரு பக்கம் பிடித்து இழுக்க, இவ்விதம் இருந்தால் அல்லவோ ஒரே கலத்தில் உணவு உண்பது போன்று இனிமையாக இருக்கும்? கையில் பாவை பறிப்பது) – "இங்குள்ள மற்ற அனைத்தையும் விடுத்து, எங்கள் கையில் உள்ள பாவையைப் பறிக்கும் இந்தச் செயலால் உனக்கு என்ன பயன்? செய்யக் கூடாதவற்றை அல்லவோ நீ செய்கிறாய்? உனக்கு இதன் மூலம் எந்தப் பயனும் இல்லை", என்றனர். "இந்தப் பாவை எங்களுடையது" என்று நாங்கள் கூறிய ஒரே காரணத்தை மட்டும் கைக்கொண்டு, இந்த பாவையைப் பறிப்பதன் மூலம் என்ன பயன் உண்டானது?

அதாவது ஒரு வைஷ்ணவன் ஒரு பொருளைக் குறித்து “என்னுடையது” என்று மமகாரத்துடன் இருந்தால், “அவன் விரும்புவது” என்று தீர்மானித்து, அதனைப் பறித்து, அவனைக் கரை சேர்க்க முயல்வதே பயன் ஆகும். இதனைக் கேட்ட இவன், “செய்யக்கூடாதவற்றைச் செய்கிறாய் என்று நீங்கள் ஏன் கூறுகிறீர்கள்? செய்யக் கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை ஆகியவற்றுக்கு வரம்பு கட்டியவன் நான் அல்லவோ?”, என்றான்.

வ்யாக்யானம் - (கடல்ஞாலமுண்டிட்ட) ப்ரளயாத்யாபத்திலே இவற்றையெல்லா மெடுத்து வயிற்றிலே வைத்து நோக்கிற்றிலேனோ? இவர்களளவும் அப்படியேயாகாதே தான். இவன் சென்று பறித்திலனாகில் அழியுமளவாகாதே அவர்களது. அது அவஸ்தாந்தரத்தை பஜித்தாகிலும் கிடக்குமிறே; இவர்களுக்குகிவனையொழிந்தவன்று ஸத்தாநாசமிறேயுள்ளது!

விளக்கம் – (கடல் ஞாலம் உண்டிட்ட) - “வரம்பு கட்டுதல்” என்றால் சூழும்படிச் செய்தல். அவ்விதம் வரம்பு கட்டியதை அருளிச்செய்கிறார். ப்ரளயத்தின்போது இவை அனைத்தையும் தனது திருவயிற்றில் பாதுகாப்பாக வைத்தவன் அல்லவோ? இவர்களுடைய நிலையும் ப்ரளயத்தில் அகப்பட்ட ஜகத்தின் நிலையே ஆகும் அல்லவோ? இவன் சென்று ஜகத்தை விழுங்கியது போன்று, அவர்களுடைய பாவையைப் பறிக்கவில்லை என்றால், ஜகத்தைப் போன்றே, அழியும்படியாக அல்லவோ இவர்கள் நிலையும் உள்ளது? ஆனால் ஜகத்திற்கும் இவர்களுக்கும் வேறுபாடு உண்டு; இந்த ஜகத்தானது ப்ரளயத்தில் அழிந்து, வேறு நிலையை அடைந்தாலும், அதன் இருப்பு என்பது தொடர்ந்தபடியே இருக்கும்; ஆனால் இவர்கள் இவனை விட்டால், இவர்களுடைய இருப்பிற்கும் அழிவு ஏற்படும் அல்லவோ?

வ்யாக்யானம் – “ஆபத்ரக்ஷகனன்றோ நான்! ஆன பின்பு, நான் செய்யுமவையெல்லாம் ப்ரயோஜந நிரபேக்ஷமாயன்றோ இருப்பது; ஆகையினால் எனக்கிதுதானேயிறே ப்ரயோஜநம்! ப்ரயோஜநத்துக்கு ப்ரயோஜநம் வருமன்று அநவஸ்த்தையாமிறே; இத்தை ஸாதநமாக நினைத்திருக்கிலிறே நான் வேறொன்றை ப்ரயோஜநமாக ஸாதித்துக் கொள்வது!” என்றான். “நீ இங்ஙன் சொல்லுவது வார்த்தையன்று காண்; எங்களிசைவின்றிக்கேயிருக்க, நீ பலத்தாலே

பறிக்கிற இதுக்கு 'ஆபத்ரக்ஷகன்' என்று சொல்லுகிற இது, நிதர்சநமாக மாட்டாது காண்; ஆன பின்பு, உனக்கு குணஹாநியேகாண் மேற்படுவது" என்றார்கள்.

விளக்கம் – அடுத்து "கடல் ஞாலம் உண்டிட்ட" என்பதற்கு இரண்டாவது ஒரு கருத்தையும் அருளிச்செய்கிறார். இவன் அவர்களிடம், "நான் ஆபத்து காலத்தில் உதவுபவன் அல்லவோ? இப்படி உள்ளபோது நான் செய்யும் செயல்கள் அனைத்தும், எந்தவிதமான பயனையும் எதிர்பார்த்து அல்ல என்றே ஆகிறது அல்லவோ? ஆகவே எனக்கு இந்தப் பாவையைப் பறிப்பது அல்லவோ பயனாக உள்ளது? இந்தப் பயன் மூலம் நான் உங்களை நெருங்கமுடியும் என்ற பயன் ஏற்படுவதாக நீங்கள் எண்ணினால், பயனுக்குப் ஒரு பயன் என்று நீண்டு கொண்டே செல்லும் அநவஸ்தை தோஷம் ஏற்படும். இவ்விதம் இந்தப் பாவையைப் பறித்தல் என்பதை நான் உபாயமாக எண்ணினால் அல்லவோ நான் இந்த பாவையைப் பறிப்பதன் மூலம் வேறு ஒரு பயனை எண்ணுவதாகக் கூற இயலும்?" என்றான். இதற்கு இவர்கள், "நீ இவ்விதம் கூற இயலாது. எங்களுடைய சம்மதம் இல்லாமல், உனது பலம் மூலம் எங்களுடைய இந்தப் பாவையை பறித்தல் என்பது, உன்னுடைய 'ஆபத்து காலத்தில் உதவுபவன்' என்று கூறுவதற்கு உதாரணமாக இருக்கமுடியாது. ஆகவே உனது குலத்திற்கு இது தாழ்வையே ஏற்படுத்தியது", என்றனர். இதற்கு இவன் அடுத்து விடை அளிக்கிறான்.

வ்யாக்யானம் - (நின்மலா நெடியாய்) "பஹுகுணனான எனக்கு ஒரு தோஷம் கிடக்குங்காட்டில் அது தெரியாநின்றதோ?" என்றான். (நின்மலா! நெடியாய்!) நிர்மலனான சந்த்ரனுக்குமன்றோ மறு கிடக்கிறது! ஆனபின்பு, குணம் ப்ரகாசிக்குமிடமெங்கும் குணஹாநியும் ப்ரகாசிக்குங்காண்!! ஹேயப்ரத்யநீகனாய் அபரிச்சேத்ய மஹாகுணனானவனே! (உனக்கேலும் பிழைபிழையே) அபரிச்சேத்யமான குணங்களையுடையையா யிருந்தாயேயகிலும் குணஹாநி குணஹாநியாயே கிடக்குங்காண்.

விளக்கம் - (நின்மலா நெடியாய்) - "பலவிதமான குணங்கள் பொருந்தியுள்ள என்னிடம் ஏதேனும் ஒரு ஒரு தோஷம் இருந்தால் அது புலப்படாமல் இருக்குமோ?", என்றான். இதற்கு இவர்கள் கூறுவது, (நின்மலா நெடியாய்) - எந்தவிதமான களங்கமும் இல்லாத சந்திரனுக்கும்கூட ஒரு மறு உள்ளது அல்லவோ? ஆகவே நற்குணங்கள் வெளிப்பட்டபடி உள்ள இடத்திலும் கூட

குணங்களின் தாழ்வானது புலப்பட வாய்ப்புள்ளது. தாழ்வுகளுக்கு எதிர்தட்டாகவும், அளவிட இயலாத குணங்கள் பொருந்தியவனாகவும் உள்ளபோதிலும், இது போன்று அபலைகளைத் தீண்டி, அவர்கள் பாவையைப் பறிக்கும் இந்தத் தவறானது உனக்குத் தாழ்வையே ஏற்படுத்திவிடும்.

வ்யாக்யானம் - இவர்கள் இப்படிச் சொன்னவாறே, இதுக்கொரு மறுமாற்றம் காணாமையாலே, பிறர்க்குப் பாசுரமிட்டுச் சொல்லவொண்ணாதபடி இவர்கள் செவியிலே சிலவற்றைச் சொல்லப்புக்கான்; "வன்மமே சொல்லி" என்கிறார்கள். தங்கள் நெஞ்சும் அவன் நெஞ்சும் அறியுமத்தனை; வாசா வ்யவஹரிக்கவொண்ணாது ப்ரணய வேளையில் பணிமொழிகள். (எம்மை நீ விளையாடுதி) நீ மர்மம் சொல்லும்போது, சொல்லுகிற உன்னையும், கேட்கிற எங்களையும் அறிந்தன்றோ சொல்லுவது. "இவன் சொன்ன மர்மம் எது" என்று எம்பாரைச் சிலர் கேட்க, " 'மயர்வற மதிநலமருளப்பெற்ற'வர் பாசுரமிட மாட்டாமல் 'வன்மம்' என்னாநின்றார்; என்னைப் பாசுரமிடச் சொல்லுகிறிகோளோ?" என்று அருளிச்செய்தார்.

விளக்கம் - இவர்கள் இது போன்று உரைத்ததைத் தொடர்ந்து, வேறு ஏதும் கூறாமல் நின்றனர். அப்போது இவன் மற்றவர்களுக்கு உரைக்க இயலாதபடியான, புணர்ச்சி காலத்தில் கூறப்படும் சில மர்மமான சொற்களை இவர்கள் காதுகளில் மட்டுமே படும்படியாக உரைத்தான். இதற்கு இவர்கள் "வன்மமே சொல்லி" என்றனர். அதாவது இது போன்று "மர்மமான சொற்கள் கூறி" என்றனர். அத்தகைய மர்மம் என்ன? அவற்றைத் தங்களுடைய நெஞ்சமும், அவனுடைய நெஞ்சமும் அறியும். அவற்றைச் சொற்கள் கொண்டு வெளிப்படையாகக் கூற இயலாது; அதாவது, ப்ரணய காலத்தில் கூறப்படும் சொற்கள். (எம்மை நீ விளையாடுதி) - நீ இவ்விதமான சொற்களைக் கூறுதல் என்பது, உரைக்கின்ற உன்மையும், கேட்கின்ற எம்மையும் அறிந்தால் அல்லவோ கூற இயலும்? அதாவது, இது போன்று நகைச்சுவை கலந்த சொற்களை, உனக்கும் எங்களுக்கும் ஸம்பந்தம் இருந்தால் அல்லவோ கூறலாம்? ஸம்பந்தம் ஏதும் இல்லாத இடத்தில் இது போன்று கூறலாமா? ஸ்வாமி எம்பாரிடம் சிலர், "இவன் கூறிய மர்மம் என்ன?", என்றனர்; அதற்கு எம்பார், "மயர்வற மதிநலம் அருளப்

பெற்ற ஆழ்வாரே, அதனைக் கூறாமல் ‘வன்மம்’ என்று கூறிவிட்டார். அது என்ன என்று என்னைக் கேட்கிறீர்களே!”, என்றார்.

வ்யாக்யானம் - (விளையாடுதி) அவன்தன்னை அழிய மாறி ஒரு மர்மம் சொன்னானானான்; இவர்கள் அத்தையெல்லாம் விளையாட்டாக்குகிறார்கள்; நெஞ்சிலில்லாதவை சொல்லுகிறவத்தால் உனக்கென்ன ப்ரயோஜநம் உண்டென்கிறார்கள். திரியவும் சிலவற்றைச் சொல்லப்புக்கான்; (அது கேட்கில் வென்னைமார்) சொல்லுகிறவையெல்லாம் எங்கள் பந்துக்கள் கேட்பர்களாகில் சாலத் தப்பாய் விடுங்கிடாய். என்னைமார் - ஆணுடன் பிறந்தார். (தன்மபாவமென்னார்) உன்பக்கல் எங்களுக்கு பாவபந்தமில்லை என்னுமிடம் அறியார்கள். நீ மேல்விழுகிறத்தைக் கண்டு, “இது செய்யலாம், இது செய்யவொண்ணாது” என்று பாராதே நலிவர்கள்கிடாய். “ஆனாலென்? அவர்கள் அது அறியா நின்றார்களோ? அவர்கள் இங்கில்லையே!” என்றான். (ஒருநான்று) அதுவோ! முதலிலே தவிரில் அறியாதொழியுமத்தனை போக்கி, எல்லாம் செய்தாலு முண்டானா லொருநாள் வரையிலே அறிவர்கள்காண். “அழகிது; அறிந்தால்தான் வருவதென்?” என்றான். (தடி பிணக்கே) பின்னைக் குத்தும் பூசலுமாயன்றோ தலைக்கட்டுவது. ராமாவதாரத்தில் ஸர்வவ்யாபாரங்களும் விற்கொண்டே வ்யாபரிக்குமாபோலே, க்ருஷ்ணாவதாரத்திலே தடி கொண்டே கார்யங் கொள்ளுமத்தனை.

விளக்கம் – (விளையாடுதி) - அவன் தனது நிலையைத் தாழ்த்திக் கொண்டவனாக நின்று ஒரு சில மர்மமான சொற்களைக் கூறினான். இதனைக் கேட்டு, அவனுக்கு தங்களுக்கும் எந்தவிதமான ஸம்பந்தமும் இல்லை என்பது வெளிப்படும்படி, அவற்றை “இல்லாத சொற்கள்” என்றாக்குவது போன்று, விளையாட்டுச் சொற்கள் என்றார்கள். இது போன்று விளையாட்டுச் சொற்களாகக் கொள்வது ஏன் என்றால், “நெஞ்சில் இல்லாதவற்றை உரைப்பதால் என்ன பயன் உள்ளது?”, என்றார்கள். இதனைக் கேட்ட அவன், “இந்த லக்ஷ்ம் குடியில் உள்ள பெண்களும் எனக்கு உறவு அல்லவோ?”, என்பது போன்ற சில சொற்களைக் கூறினான். இதற்கு இவர்கள் விடை கூறுகிறார்கள். (அது கேட்கில் வென்னைமார்) – “நீ கூறும் இது போன்ற சொற்களை எங்கள் உறவினர்கள் கேட்டால், மிகுந்த தவறாகப் போகும்”, என்றார்கள். (தன்மபாவமென்னார்) - உன் விஷயத்தில்

எங்களுக்கு எந்தவிதமான ஸம்பந்தமும் இல்லை என்று அவர்கள் உணரமாட்டார்கள். நீ எங்களுடன் இவ்விதமாக நெருங்கி நின்று உரையாடுவதைக் காணும் அவர்கள், "இதனைச் செய்யலாம், இதனைச் செய்தல் கூடாது" என்று ஆராயாமல் உன்னை அடிப்பார்கள். இதனைக் கேட்ட அவன், "அதனால் என்ன? உங்கள் உறவினர்கள் இவற்றை எப்படி அறிவர்? அவர்கள் யாரும் இங்கு இல்லை அல்லவோ?", என்றான். இதற்கு இவர்கள், "(ஒருநான்று) - அப்படியா! இதனை முதலிலேயே நாம் தவிர்த்தால், அவர்கள் அறியாதபடி நாம் செய்யலாம். ஆனால் பல நாள்கள் இது போன்று நிகழ்ந்தால், ஒருநாள் அவர்கள் அறிவர் என்பதை உணர்வாயாக", என்றனர். இதற்கு அவன், "நல்ல அழகு! அவர்கள் அறிந்தால் நடப்பது என்ன?", என்றான். இதற்கு விடை அளிக்கிறார்கள். (தடி பிணக்கே) - அதன் பின்னர் கைகளால் குத்துவதும், வாயால் திட்டுதலும் அல்லவோ இதன் முடிவாக இருக்கக்கூடும்? இராமாவதாரத்தில் அனைத்து செயல்களையும் வில்லைக் கொண்டே செய்வது போன்று, க்ருஷ்ணாவதாரத்தில் அனைத்தையும் தடியைக் கொண்டு அல்லவோ செய்தான்?

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்